தட்டும் ஒலி) இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்காக 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம் தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளில், கூடுதலாக 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், வரலாறு, பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதுடன், இந்தப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும் இது வழிவகுக்கும். மேலும் கடந்த பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்போது, தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையும் தற்போது மாற்றப்பட்டு, தமிழ் மொழிப் பாட ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுவதால், தமிழ் மொழிப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்பு பெற இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு 100 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக 44 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிவிப்பு

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை / ஆட்சிக் குழு / கல்விக் குழு / நிர்வாகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாட்டிலுள்ள பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை (Senate), ஆட்சிக் குழு (Syndicate), கல்விக் குழு (Academic Council) மற்றும் நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றில்

2011 ஆகஸ்ட் 12] [பேரவைத் தலைவர்]

அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அப்பல்கலைக்கழகங்களுக்கு நேரெதிரே குறிப்பிடப்பெற்றுள்ள காலியிடங்களுக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகப் பதிவாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன:

பல்கலைக்கழகம்	உறுப்பினர்களின் எண்ணிக்கை
சென்னைப் பல்கலைக்கழகம்	6
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்	2
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	3
அழகப்பா பல்கலைக்கழகம்	1
பாரதியார் பல்கலைக்கழகம்	2
பாரதிதாசன் பல்கலைக்கழகம்	2
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்	4
மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	2
தமிழ்ப் பல்கலைக்கழகம்	2
பெரியார் பல்கலைக்கழகம்	2
அண்ணா பல்கலைக்கழகம்	1
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்	1
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்	1
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	1
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	2

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களுள், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 10–1–2013 வரை ஆகும். அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5–12–2013 வரை ஆகும். மற்ற பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 16–8–2011 அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்புமனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 16–8–2011 அன்று பிற்பகல் 4–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 16–8–2011 அன்று பிற்பகல் 5-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக் கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

முற்பகல் 10–10

4. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் பதிலுரையும். மாண்புமிகு சட்டமன்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 2011–2012 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக நான் சார்ந்திருக்கக்கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒருசில கருத்துகளை இந்த மாமன்றத்தின் முன்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அம்சங்கள், கிட்டத்தட்ட 99 பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய அத்துணை அம்சங்களையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி முழு மனதாகப் பாராட்டி வரவேற்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்; இந்தத் திட்டங்கள் முழுமையும் மக்களிடம் சென்றடைய வேண்டும். திட்டங்களை நிறைவேற்ற, திட்டங்கள் மக்களிடம் சென்றடையக்கூடிய முறையில், இரண்டு ஆண்டுக் காலம் நம்முடைய அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் முழுமையான ஈடுபாட்டோடு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு involvement—ஐச் செலுத்த வேண்டும்.